## சுருக்கம்

அறிவிப்புகள் 2022-23 – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – 2022 ஆம் ஆண்டு முதல் மீண்டும் நவம்பர் 1ஆம் நாள் "உள்ளாட்சிகள் தினம்" என அறிவித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.2) துறை**

**அரசாணை (நிலை) எண்.64** | **நாள் 23.05.2022.**
**சுபகிருது, வைகாசி 9,**
**திருவள்ளுவர் ஆண்டு 2053.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (ப) எண்.632 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி1) துறை, நாள்.26.10.2007.
2. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு நாள் 22.04.2022.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கடிதம் ந.க.எண்.26216/2022/ப.ரா.1.1, நாள் 30.04.2022.

*****

**ஆணை:**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 22.04.2022 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி எண்.110ன் கீழ் கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:

**"ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 1ஆம் நாள் உள்ளாட்சிகளின் தினமாகக் கொண்டாடப்படும் என 2007 ஆம் ஆண்டு அறிவிப்பு செய்த முத்தமிழ்**

**அறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு மீண்டும் உள்ளாட்சிகள் தினத்தை ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடும்".**

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் ஒளிவுமறைவற்ற வெளிப்படைத் தன்மையினை ஏற்படுத்த வேண்டியும், உள்ளாட்சி அமைப்புகளின் சாதனைகள் மற்றும் திட்டச் செயலாக்கங்கள் குறித்து தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கங்கள் நடத்தவும் நவம்பர் 1 ஆம் நாளினை "உள்ளாட்சிகள் தினம்" என கொண்டாட மாண்புமிகு முதல்வர் அவர்கள் துணை முதல்வராக இருந்தபோது அவர் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட 3வது உயர்மட்ட குழு பரிந்துரை செய்தது. அதனடிப்படையில், அப்பரிந்துரையினை ஏற்று அரசாணை (ப) எண்.632, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி1) துறை, நாள்.26.10.2007-ல் நவம்பர் 1 ஆம் நாள் "**உள்ளாட்சிகள் தினம்**" என அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வந்தது என்றும், இடைக்காலத்தில் இந்த உள்ளாட்சிகள் தினம் கொண்டாடப்படாமல் இருந்த காரணத்தினால் இதனை மீள கொணரவும் மீண்டும் புத்துணர்ச்சியுடனும் புதுப்பொலிவுடனும் கொண்டாட வேண்டும் என்கிற காரணத்தினால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 22.04.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 1ஆம் நாள் "உள்ளாட்சிகள் தினம்" ஆக கொண்டாடப்படும் என அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

3. மேலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க 2022 ஆம் ஆண்டு முதல் நவம்பர் 1 ஆம் நாள் "**உள்ளாட்சிகள் தினம்**" ஆக கொண்டாடப்படும் என்றும், நவம்பர் 1 உள்ளாட்சிகள் தினத்தைக் கொண்டாடும் வகையில் கிராமசபைக் கூட்டங்கள் நடத்துதல், கண்காட்சி நடத்துதல், ஊழியர்களை அங்கீகரித்தல்

மற்றும் கலந்துரையாடல்கள் நடத்துதல் போன்ற நிகழ்வுகள் நடைபெற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

4. எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் நவம்பர் 1 ஆம் நாளினை ஆண்டுதோறும் உள்ளாட்சிகள் தினமாக மீண்டும் கொண்டாடும் வகையில் அரசாணையினை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் உள்ளாட்சிகள் தினத்தினை கொண்டாடும் வகையில் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் மற்றும் இதர நிகழ்வுகளை நடத்திடவும் ஆணை வேண்டிள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்தது. அதன்படி 2022 ஆம் ஆண்டு முதல் நவம்பர் 1ஆம் நாளினை "உள்ளாட்சிகள் தினம்" என அறிவித்து மீண்டும் ஆண்டுதோறும் கொண்டாட அரசு ஆணையிடுகிறது. மேலும் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மற்றும் இதர நிகழ்வுகளை "உள்ளாட்சி தின" நாள் அன்று நடத்திடவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது:

**1. கிராம சபைக் கூட்டங்கள் நடத்துதல் :**

உள்ளாட்சிகள் தினத்தினை முன்னிட்டு நவம்பர் 1 அன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்கள் நடத்திட வேண்டும். இந்த கிராம சபைக் கூட்டத்தில், அவ்வூராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து முழுமையாக விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும்; கிராம சபைக் கூட்டங்களில் ஏதேனும் ஒரு ஊராட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் கூட்டப்பட்டு நலத்திட்ட உதவிகள் பல்வேறு துறை பயனாளிகளுக்கு வழுங்கப்பட வேண்டும்.

2. கண்காட்சி நடத்துதல் :

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட அலுவலகத்தில், ஏதேனுமொரு இடத்தில் பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், பணிகள் குறித்த கண்காட்சிகள் நடத்தலாம். மேலும், அங்கு அரசால் வெளியிடப்படும் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு குறித்த குறும்படங்கள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

3. ஊழியர்களை அங்கீகரித்தல் :

கிராம ஊராட்சி அளவில் சிறப்பாக பணிபுரிந்த தூய்மைக் காவலர்கள், தூய்மைப் பணியாளர்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளைச் சார்ந்தவர்களை பெருமைப்படுத்தும் விதமாக அவர்களுக்கு கிராம சபையில் பாராட்டுத் தெரிவிக்கப்பட வேண்டும்.

4. கலந்துரையாடல்கள் நடத்துதல் :

உள்ளாட்சிகள் தினத்தினை கொண்டாடும் விதமாக சிறப்பாக செயலாற்றிய, பூர்வாங்கப் பணிகளை மேற்கொண்ட, பசுமை மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாத்து, அந்த ஊராட்சியின் வருவாயினை அதிகரித்து அதன் பலனை ஊராட்சிக்கு சரியான வகையில் பயன்படுத்திய, கிராம ஊராட்சித் தலைவர்களைக் கொண்டு கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் மற்றும் கருத்துபட்டறைகள் போன்றவற்றை நவம்பர் முதல் வாரத்தில் நடத்திடலாம். மேலும், இப்பணிகளை தொடர்புடைய மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பயிற்சி நிறுவனம் மண்டல பயிற்சி நிறுவனங்கள் மூலம் ஏற்பாடு செய்திட வேண்டும். உள்ளாட்சி தினத்தன்று மாநில அளவில் பல்வேறு திட்டங்கள் குறித்த வழிமுறைகள்,

செயல்பாடுகள் அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து குறும்படங்கள், கையடக்கப் புத்தகங்கள், ஆவணப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை 15.
கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைமை இயக்குநர் (பயிற்சி), சென்னை 15.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை-34.
தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம், சென்னை-32.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை-105.
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், மறைமலைநகர், செங்கல்பட்டு.
திட்ட இயக்குநர் / உறுப்பினர் செயலர், தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம், சென்னை-32.
இணை இயக்குநர், தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம், சென்னை-15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள்.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை -9.
தலைமைச் செயலளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்